DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM

| | | |
|---|---|---|
| Case number | : | CC 272 of 2022 |
| Deposition of witness | : | PW - 1 |
| Name | : | குணா |
| Father Name | : | திரவியம் |
| Age | : | 66 |

**A3 absent. Other all accused present**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 16.07.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது ராஜபதியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கின் எதிரிகளை தெரியும். சுமார் 4-5 ஆண்டுகளுக்கு முன்பாக, இரவு சுமார் 8.30 மணியளவில், எங்களது ஊரில் உள்ள பிள்ளையார் கோவில் அருகே நின்று கொண்டிருந்தேன். அப்போது இருட்டில் கும்பலாக சுமார் 10 - 20 பேர் வந்தார்கள். எனது மகன் நிர்மல் சேகரை தாக்கினார்கள். இது சம்பந்தமாக குரும்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு சென்று விட்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள் ஒரு வெள்ளைத்தாளில் எனது கையொப்பம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள குணா என்ற கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்க அனுமதிக்கப்படுகின்றன)**

2. கடந்த 08.03.2020 ஆம் தேதி மதியம் சுமார் 03.30 மணி அளவில் நானும் எனது மகன் நிர்மல் சேகரும் இராஜபதி சோமசுந்தரவிநாயகர் கோவில் அருகே நின்று கொண்டிருந்தபோது, இந்த வழக்கின் எதிரிகள் இரண்டு இருசக்கர வாகனத்தில் அங்கு வந்து, என்னை கெட்டவார்த்தையால் பேசி, காலால் அடித்து காயம் ஏற்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று போலிசில் புகார் கொடுத்துவிட்டு ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

1. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.16 11:24:19 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM

| | | |
|---|---|---|
| Case number | : | CC 272 of 2022 |
| Deposition of witness | : | PW - 2 |
| Name | : | நிர்மல் சேகர் |
| Father Name | : | குணா |
| Age | : | 40 |

**A3 absent. Other all accused present**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 16.07.2026.

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்போது ராஜபதியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கின் எதிரிகளை தெரியும். புகார்தாரர் குணா எனது தந்தை ஆவார். எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்க அனுமதிக்கப்படுகின்றன)**

2. கடந்த 08.03.2020 ஆம் தேதி மதியம் சுமார் 03.30 மணி அளவில் நானும் எனது தந்தை குணாவும் இராஜபதி சோமசுந்தரவிநாயகர் கோவில் அருகே நின்று கொண்டிருந்தபோது, இந்த வழக்கின் எதிரிகள் இரண்டு இருசக்கர வாகனத்தில் அங்கு வந்து, கெட்டவார்த்தையால் பேசி, காலால் அடித்து எனக்கு காயம் ஏற்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று போலீசாரின் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரிகள் எனது

உறவினர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

1. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.16 11:24:26 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM

| | | |
|---|---|---|
| Case number | : | CC 272 of 2022 |
| Deposition of witness | : | PW - 3 |
| Name | : | **மணிவண்ணன்** |
| Father Name | : | **அர்ஜுனன்** |
| Age | : | 53 |

**A3 absent. Other all accused present**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 16.07.2026.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ராஜபதியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கின் எதிரிகளை தெரியும். புகார்தாரர் குணா மற்றும் நிர்மல் சேகர் ஆகியோரை எனக்குத் தெரியும். எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்க அனுமதிக்கப்படுகின்றன)**

2. கடந்த 08.03.2020 ஆம் தேதி மதியம் சுமார் 03.30 மணி அளவில் குணாவும் அவரது மகன் நிர்மல் சேகரும் இராஜபதி சோமசுந்தரவிநாயகர் கோவில் அருகே நின்று கொண்டிருந்தபோது, இந்த வழக்கின் எதிரிகள் இரண்டு இருசக்கர வாகனத்தில் அங்கு வந்து, அவர்களை கெட்டவார்த்தையால் பேசி, நிர்மல் சேகரை காலால் அடித்து காயம் ஏற்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும் நான் சம்பவத்தை

நேரில் பார்த்தேன் என்றும் போலிசார் விசாரணையின் போது சொல்லிவிட்டு, எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.16 11:24:32 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM

| | | |
|---|---|---|
| Case number | : | CC 272 of 2022 |
| Deposition of witness | : | PW - 4 |
| Name | : | கந்தசாமி |
| Father Name | : | முத்து மாலை |
| Age | : | 49 |

**A3 absent. Other all accused present**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 16.07.2026.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது ராஜபதியில் வசித்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கின் எதிரிகளை தெரியும். புகார்தாரர் குணா மற்றும் நிர்மல் சேகர் ஆகியோரை எனக்குத் தெரியும். எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சாட்சி முத்துராமன் என்கின்ற கணேசன் தற்போது உயிருடன் இல்லை அவர் இறந்து விட்டார்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்க அனுமதிக்கப்படுகின்றன)**

2. கடந்த 08.03.2020 ஆம் தேதி மதியம் சுமார் 03.30 மணி அளவில் குணாவும் அவரது மகன் நிர்மல் சேகரும் இராஜபதி சோமசுந்தரவிநாயகர் கோவில் அருகே நின்று கொண்டிருந்தபோது, இந்த வழக்கின் எதிரிகள் இரண்டு இருசக்கர வாகனத்தில் அங்கு வந்து, அவர்களை கெட்டவார்த்தையால் பேசி, நிர்மல் சேகரை காலால் அடித்து காயம்

ஏற்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும் நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும் போலிசார் விசாரணையின் போது சொல்லிவிட்டு, எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.16 11:24:38 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்

## DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM

| | | |
|---|---|---|
| Case number | : | CC 272 of 2022 |
| Deposition of witness | : | PW - 5 |
| Name | : | பிள்ளை முத்து |
| Father Name | : | வெங்கடாசலம் |
| Age | : | 56 |

**A3 absent. Other all accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 16.07.2026.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது குரும்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் கண்ணன் மற்றும் இறுதி அறிக்கை தயார் செய்த உதவி ஆய்வாளர் சுந்தரராஜ் ஆகியோரின் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம் என்பதாலும், இந்த வழக்கில் சாட்சிகள் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ள காரணத்தினாலும், நீதிமன்றத்தின் நேரம் கருதி நீதிமன்றத்தின் அனுமதியுடன் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 08.03.2020 ஆம் தேதி இரவு 22.00 மணிக்கு குரும்பூர் காவல் நிலைய தலைமை காவலர் திரு.கண்ணன் நிலைய அலுவலில் இருந்தபோது, ராஜபதியை சேர்ந்த குணா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று அதன் தன்மைக்கேற்ப குற்ற எண் 28/2020 சட்ட பிரிவுகள் 147, 294(b), 323, 506(2) IPC ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். பின்னர் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்-1 ஸ்ரீவைகுண்டத்திற்கு

அனுப்பியுள்ளார். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ 2 செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் வழக்கு கோப்பினை விசாரணை அதிகாரி எடுத்துக்கொண்டு அன்றைய தினமே இரவு 23.00 மணியளவில் வழக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாரி ஜெயமூர்த்தி மற்றும் ஜெயராமன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ 4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் அதே தேதியில் 23.30 மணியளவில் வழக்கு சொத்து பொருளான HR 05 E 1855 என்ற பதிவெண் கொண்ட ராயல் என்ஃபீல்டு புல்லட் மோட்டார் சைக்கிள் மற்றும் TN 72 K 4146 என்ற பதிவெண் கொண்ட ஹீரோ ஹோண்டா சிடி மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ 6 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ 7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்பு 1 முதல் 8 மற்றும் 10 வரையிலான பட்டியல் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் மாண்புமிகு தூத்துக்குடி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்ற காரணத்தினால் அவர்கள் மீது கைது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த வழக்கில் காயமுற்ற சாட்சி குணாவிற்கு சிகிச்சை அளித்த திருச்செந்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. ஹெரால்டு செல்வின் ராஜ் என்பவரை விசாரணை செய்து

காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **மேற்படி காயச்சான்று அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் தனது விசாரணை முடித்து 06.06.2020 ஆம் தேதி எதிரிகளின் மீது மேற்படி பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்

**குறுக்கு விசாரணை**

நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகளை சொன்ன விதத்தில் விசாரணை செய்து வழக்கின் ஆவணங்கள் தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.16 11:24:46 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்